1979 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : திருடு கண்டுபிடிக்கப் பட்டது, ஆனால் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்வது அவ்வளவு சரியா ? ஆகவே, யார் அதைத் திருடினார்கள் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மீண்டும் அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, களவு போனதாக சொல்லப்பட்ட 10 வால்வுகளின் மொத்த விலை ரூ. 28,500 திருடியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்ற முறையில்தான், மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

*வினா எண் 39—திரு. ம. கண்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக திறக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(ஆ) அவை மாவட்ட வாரியாக பிரித்து பகிர்ந்தளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) தமிழ் நாட்டிலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் 374 ஆரம்ப சுகாதர நிலையங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் தமிழ்நாட்டில் தற்போது 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, வரும் நிதியாண்டில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்க உத்தேசமில்லை .

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வாசுதேவநல்லூரில் இருக்கக்கூடிய அந்த பிரைமரி ஹெல்த் சென்டர் கட்டிடம் முழுமையாக உடைந்து, பயனற்ற முறை

யில், தனியாருடைய சிறிய இடத்திலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்தார்கள். அப்படி பார்க்கின்ற நேரத்திலே போட்டோகூட எடுக்கப்பட்டது. கூடியவிரைவில் அந்தப் பகுதியிலே கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இப்போது சொல்லுகின்ற பதிலிலே முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, புதிதாக கட்டிடத்தை அங்கே கட்டுவதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும், இதிலே மத்திய அரசாங்கத்தின் உதவி எந்த அளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஒட்டு மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாசுதேவநல்லூர் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர் நியமிக்கப்படுவார் என்று ஓராண்டு காலத்திற்கு முன்னால் அறிவிக்கப்பட்டது. இது வரை எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்? கடந்த நான்காண்டுகளாக மருத்துவப் பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். மூன்றாவது மருத்துவரை ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிப்பதன் மூலம் அந்த மருத்துவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதுபற்றி அரசு ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

திரு. சி. கோவிந்தராசன் : ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ள இடங்களில் அந்தச் சிப்பந்திகள், டாக்டர்கள் வசிக்க இடம் இல்லாத காரணத்தால் அங்கே அவர்கள் பணி புரிவது கஷ்டமாக இருக்கிறது. அதனால் டாக்டர்கள் அங்கே போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியத்தில் குவார்ட்டர்ஸ் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன என்ற ஒட்டு மொத்தமான கேள்வியில் குறிப்பிட்ட பகுதிகளைப் பற்றிய விவரங்கள் அமைச்சரிடம் இருக்க முடியாது. ஆகவே, அதுபோன்ற குறிப்பிட்ட கேள்விகளைக் கேட்க வேண்டாம்.

1979 அக்டோபர் 29]

திரு. சி. கோவிந்தராசன் : அண்ணா கிராம ஒன்றியம் அதிக மான விஸ்தீரணத்தில் இருப்பதால் அங்கு மேலும் ஒரு ஆரம்ப சுகாதர நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தற்போது புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். எம். ஏ. ரசாக் : 383 ஆரம்ப சுகாதார நிலையங் களில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களில் மொபைல் யூனிட் ஆரம்பிக்கப்பட்டது உடனடியாக எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மொபைல் யூனிட் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி 50 ஆரம்ப சுகாதார நிலை யங்களில் நடமாடும் மருத்துவ மனைகள் தொடங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற ஆரம்ப சுகாதார நிலையங் களிலும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : புதிதாக ஆரம்ப சுகாதார நிலை யங்கள் ஆரம்பிக்க இந்த ஆண்டு உத்தேசம் இல்லையென்று சொன்னார்கள். அது சரிதானா? மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங் கள்–நெல்லை மாவட்டத்தில் ஓட்டப்பிடாரம், கயத்தாறு போன்ற பெரிய யூனியன்கள் உள்ளன. அதிலே 60,70 பஞ்சா யத்துக்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் இரண்டிரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவேண்டியது மிக அவசியம். அங்கு பக்கத்தில் ஆஸ்பத்திரி கிடையாது. இப்படிப்பட்ட பெரிய ஊராட்சி ஒன்றியங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங் களை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் ; தற்போது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்குவதற்கான உத் தேசம் இல்லை. அப்படி மிக அவசியமாகத் தேவை ஏற்படுகிறது என்று கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய முறையில் பரி சீலித்து தேவை என்று வருமானால் அதற்குரிய பரிசீலனை மேற் கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுப் பிரிவும் குடும்ப நலப் பிரிவும் ஒன்றாக இயங்கி வருகின்றன. ஒரு ஒன்றியத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்தான் உள்ளது. பொதுப் பிரிவையும் குடும்ப நலப் பிரிவையும் இரண்டாகப் பிரித்து குடும்ப நலப் பிரிவை இன்னொரு கிராமத்தில் அமைக்கும் உத்தேசம் உண்டா? அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுப் பிரிவும் குடும்ப நலப் பிரிவும் தனித் தனியாக இயங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அதுபோல் இயங்க வேண்டுமென்று தான் முதலில் அதற்கான திட்டத்தை வைத்தார்கள். பின்னால் இரண்டும் இணைந்து செயல் படுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதிய காரணத்தால் அதைப் பிரிக்காது இணைந்தே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

(வேலூர் கிருஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.)

*வினா எண் 40—திரு. வி. கே. கோதண்டராமன்; மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் சி. எம். சி. ஆஸ் பத்திரியில் கழிவுப் பொருட்களை எரிப்பதற்கு ராட்சத அடுப்பு உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) 18—3—1979-ம் தேதி சரியாக எரியாத நிலையில் இரண்டு பிணங்கள் இருந்ததை வேலூர் போலீஸ் அதிகாரிகள் போய்ப் பார்த்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(ஈ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) வேலூர் சி. எம். சி. தனியார் மருத்துவ மனையில் உள்ள இராட்சத அடுப்பில் காணப்பட்ட உடல்கள் 27 வயதான தொழு நோயாளி திருமதி சாவித்திரி என்பவருடையதும், 9 வய தான மிகிர்குமார் பிஸ்வால் என்ற சிறுவனுடையதும் ஆகும். கரிகிரி மருத்துவ மனையில் தொழு நோயின் காரணமாக மரண மடைந்த சாவித்திரியின் உடல் சி. எம். சி. மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பரிசோதனைக்குப் பிறகு சவக்கிடங்கில் வைக்கப் பட்டது. சி. எம். சி. மருத்துவமனையில் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்பட்டு 15—3—1979-ம் தேதி மரணமடைந்த சிறுவன் மிகிர்குமார் பிஸ்வாஸின் உடலும் சவக்கிடங்கில் வைக்